283–

பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்க நடவடிக்கை

***19949--திரு. தா. செழியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் போதுமான மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு போதுமான அளவுக்கு மருந்துப் பொருட்கள் விநியோகிக்க இணை இயக்குநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கத்தின் முழக்கம், சிறுத்தையின் பாய்ச்சல், வேங்கையின் கம்பீரம், நிலவின் குளிர்ச்சி, மின்னலின் வீச்சு, இடியின் கர்ஜனை, அருவியின் ஓட்டம், தென்றலின் தெம்மாங்கு இத்துணைக்கும் எத்துணை சக்திகள் உண்டோ அத்துணை சக்திகளையும் ஒருங்கே தன்னகத்தே அமையப் பெற்றவர் எங்களுடைய ஒப்பற்ற தலைவி தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். கடலிலிருந்து அலையைப் பிரிக்கலாம். கதிரவனிலிருந்து ஒளியைப் பிரிக்கலாம். மலரிலிருந்து மணத்தைப் பிரிக்கலாம். ஆனால் மக்கள் மனதிலேயிருந்து புரட்சித் தலைவி அவர்களை யாராலும் பிரிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் எழுந்தால் இமயம், நடந்தால் கங்கை, சிரித்தால் வசந்தம், சீறினால் பிரளயம், எனவே நான் வணங்கும் புனிதத் தாய் அவர்களுக்கு, நீண்ட நாள் கோரிக்கையான திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இவ்வினாவிற்குரிய மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய விடைக்குள் நுழைகின்றேன். பெரம்பலூர் வட்டம் என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலேயே மிகப் பெரிய வட்டமாகும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்வது வேறு. இந்த நேரத்தில் இன்னொரு கோரிக்கையையும் வைப்பது சரியல்ல. நன்றி சொல்வது மட்டும் அவைக் குறிப்பிலே இருக்கும். அடுத்த பகுதி அவைக் குறிப்பிலே இருக்காது.

திரு. தா. செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் பெரிய வட்டமாக இருக்கிறது. தினமும் புற நோயாளிகள் ஏறத்தாழ 1500 பேர்கள் மருத்துவமனைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. சென்னை-திருச்சி நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதியாக இருப்பதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. எனவே தேவையான மருந்துகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைப் போட்ட உடனேயே அரசால் மீண்டும் கவனிக்கப்பட்டது. எதிர்காலத்திலே தேவை ஏற்படுகிறபோது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

முற்பகல் 10.15

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் காக்கும் மருந்து என்று சொல்லப்படும்-பாம்புக் கடி மருந்து, நாய்க் கடி மருந்து, அது மட்டுமல்லாது நல்ல பாம்பு கடிக்கு என்று-தனி 'டோப்பமின்' என்ற மருந்து இருக்கிறது. இதுபோன்ற உயிர் காக்கும் மருந்துகள் எல்லாம் அங்கே இருப்பில் இருப்பதில்லை. அந்த உயிர் காக்கும் மருந்துகள் இருப்பில் இருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பாம்புக் கடி மருந்து, நாய்க்கடி மருந்து எல்லாம் ஒரு நேரத்தில் கிடைக்காத சிரமம் இருந்தது. ஆனால் இப்போது சமீபத்தில் அவைகள் எல்லாம் சீர் செய்யப்பட்டு நம்முடைய மாநிலத்தில் இல்லை என்றாலும் கூட அது எங்கே கிடைத்தாலும் அதை வாங்கி வைக்கவேண்டுமென்று உத்தரவு போட்டு இப்போது அந்தந்த மாவட்டங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனையில் குறிப்பிட்ட அந்த மருந்து இல்லாமல் இருக்குமானால் நிச்சயமாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சொல்லி அவர்களுக்கு அறிவுறுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 284, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 285, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 286, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 287, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

287–

பேரூர் தொகுதியில் சில பகுதிகளில் முழுநேரமும் மின்சாரம் வழங்குதல்

***20160--திரு. கே. பி. ராஜு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி செட்டிப்பாளையம், மலுமிச்சம்பட்டி ஆகிய இடங்களில் முழுநேரமும் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி செட்டிபாளையம், மலுமிச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் மதுக்கரை துணை மின்நிலையத்திலிருந்து வெளிவரும் கிணத்துக்கடவு 22 கே. வி. ஊரக மின்னூட்டி மூலம் மின் வினியோகம் நடைபெறுவதால் இங்கு முழுநேரமும் மும்முனை மின்சாரம் வழங்க இயலாது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதி செட்டிபாளையம், மலுமிச்சம்பட்டி, ஒத்தக்கால் மண்டபம் போன்ற பகுதிகள் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள். அங்கே இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட் கூட இருக்கிறது. நேற்றைக்குக் கூட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து ஒரு பத்திரிக்கை அலுவலகத்தைத் திறந்து வைத்து விட்டு வந்தார்கள். இதுவெல்லாம் அதை உள்ளடக்கிய பகுதிகள் தான். ஆகவே, அந்தப் பகுதியில் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால்--மின்சாரம் 6 மணி நேரம் தான் வருகிறது. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதைப்